செ.வெ.எண்.67 நாள்: 02.03.2021

நீலகிரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021-ஐ முன்னிட்டு, குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள வாக்குச்சாவடிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்து, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---

இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளபடி, 06.04.2021 அன்று நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம், கூடலூர் மற்றும் குன்னூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. மேலும், தேர்தல் ஆணையம் கொரோனா நோய் தொற்று காரணத்தினால்,1050-க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ள வாக்குச்சாவடிகளை, இரண்டாக பிரித்து, துணை வாக்குச்சாவடி மையங்களை ஏற்படுத்திட தெரிவித்துள்ளது. அதனடிப்படையில், நீலகிரி மாவட்டத்தில் தற்போது வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 868 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், தேர்தல் ஆணையம் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் அடிப்படை வசதிகளை உறுதி செய்திட தெரிவித்துள்ளது. அதனடிப்படையில், இன்று (02.03.2021) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள், குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள குன்னூர் இன்கோசர்வ் குடோன், நகராட்சி தொடக்கப்பள்ளி (குன்னூர் டவுன்), வெலிங்டன் புனித ஜோசப் நடுநிலைப்பள்ளி, வெலிங்டன் பாளைய வாரிய உயர்நிலைப்பள்ளி ஆகிய வாக்குச்சாவடிகள் மற்றும் துணை வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நாளன்று வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்குள் செல்லும் வழி, வாக்கு பதிவிற்கு பின்பு வெளியேறும் வழி, சாய்வு தளம் வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ் ஆய்வின் போது, குன்னூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/ குன்னூர் சார் ஆட்சியர் திரு.ரஞ்சித்சிங் இ.ஆ.ப., குன்னூர் வட்டாட்சியர் திரு.ஸ்ரீனிவாசன், குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ஸ்ரீதரன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.